மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே விடைதான் அவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கேயும் அமைச்சர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். செயலாளர்களுக்கும் சொல்லச் சொல்லியிருக்றேன். நிறைய வினாக்கள் வரும். ஒரு நாளைக்கு 15, 20 கூட வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, வினாக்களை நீங்கள் உங்களுடைய அலுவலகத்திலிருந்து எங்களுடைய துறைக்கு அனுப்புகின்றபோது, அமைச்சர்கள் மூலமாக அனுப்பினால் எவ்வளவு விரைவாக, பதில் அனுப்ப முடியுமோ, அதை நாங்கள் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய முடியும். ஆனால் எங்களுக்குத் தெரியாதபடியே துறைகளுக்கே வந்து சேர்ந்து விடுகிற காரணத்தால் எங்களால் அதைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. எனவே, அமைச்சர்கள் மூலம் இந்த வினாக்கள் துறைக்கு அனுப்பப்பட ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது குறித்து நேரடி கவனம் செலுத்தப்படும்.

(ஆ) கடலூர்ப் பொதுக்கூட்டத்திற்குச் சென்ற சிலர் தாக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்று இரவு கடலூரிலிருந்து புறப்பட்டு அதிகாலை 4 மணிக்குத்தான் நான் வந்தேன். ஒரு பொதுக்கூட்டத்திலே பேசுவதற்காக, காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே நடந்த பொதுக் கூட்டத்திலே பேசுவதற்காக, நானும், புதுவை மாநில முதல்வர் திரு. பாரூக் அவர்களும் சென்று இருந்தோம். எங்களுக்குப் போதுமான பாதுகாப்பு அந்தக் கூட்டத்தில் கொடுக்கப்படாத காரணத்தினாலே, அங்கே பல துன்பங்கள் விளைந்தன என்பதை உங்களுக்கு நினைவுபடுத்தி, எங்கள் கூட்டத்திற்கு வந்து கொண்டிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர் ராமலிங்கத்தினுடைய மகன் கம்மான் என்பவரை, ஆளுகிற கட்சியைச் சார்ந்த சில தோழர்கள் வழிமறித்துத் தாக்கி அவருடைய தாடை எலும்ப ஒடிந்து இன்று மயக்க நிலையிலே ஆஸ்பத்திரியிலே போடப்பட்ட செய்தி கேள்விப்பட்டு ஓடோடிச் சென்று பார்த்தபோது—நானும் அங்கிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்களும் சென்று பார்த்தோம். —நினைவிழந்த நிலையிலே அவர் அங்கு கிடந்து கொண்டிருந்ததையும், அந்தத் தாடை எலும்பு ஒடிந்ததோடு மட்டுமல்லாமல்,

நினைவு இழந்த காரணத்தால் அவருக்குத் தலையில் தாக்குதல் நடந்திருக்கிறது என்பதையும் இந்தச் சூழ்நிலையில் அவருடைய உயிருக்கு ஆபத்து என்பதையும், உடனடியாக சென்னைக்குக் கொண்டு போக வேண்டும் என்பதையும் அங்கு இருக்கின்ற டாக்டர்கள் தெரிவித்தார்கள். (மணியடிக்கப்பெற்றது).

(முற்பகல் 9-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு வினா உங்களுக்கு. இதை எதன் அடிப்படையில் நீங்கள் பேசுகிறீர்கள் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடீரென்று எழுந்து இப்படி ஒரு செய்தியைச் சொன்னால் என்னால் விவரங்கள் சேகரிக்க இயலாது. இதை நாளைக்கு ஒரு " அட்ஜெர்ன்மென்டு மோஷனாக " அவர்கள் கொடுப்பார்களானால் உடனடியாக நான் அதிகாரிகளோடு தொடர்புகொண்டு அதற்கான விளக்கத்தை அவருக்கு அளிக்க முடியும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை என்னுடைய அறையிலே சொல்லியிருந்தால் நான் உங்களுக்கு அப்போதே விடை சொல்லியிருப்பேன். இப்படி அவையில் வந்து என்னுடைய இசைவைப் பெறாமல் எழுப்புவது மரபு தானா ? அல்லது விதி தானா என்பதை நீங்கள் உணர வேண்டும்.

திரு. குமரி அனந்தன் : மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். முதலில் நானே காலையில் தான் இங்கு வந்து சேர்ந்தேன் என்று சொன்னேன். காலை 4 மணிக்குத் தான் வந்து சேர்ந்தேன் என்று சொன்னதற்குக் காரணமே தங்களுடைய அறைக்கு வரமுடியாமைக்குக்குறிப்பிட்ட காரணம் ஆகும்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இந்த அவைக்கு வந்து ஏறத்தாழ 45 நிமிடங்கள் அல்லது 30 நிமிடங்கள் ஆகிறது. வந்தவுடனே அவர்கள் ஒரு குறிப்புக் கொடுத்திருந்தால் கூட, நான் கூட அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அவரை மருத்துவமனையில் சேர்க்கிற அந்த ஏற்பாட்டையாவது சரியாகச் செய்தார்களா என்று விசாரித்து இருக்க முடியும். ஆனால் அவர்கள்கூட இந்தப் பிரச்சினையை எழுப்பித்தான் ஆகவேண்டும் என்பதிலேயே கருத்தினைச் செலுத்தி அழுத்தமாக அரை மணி நேரம் கழித்துத்தான் ழுப்பியிருக்கிறார்கள் என்பதை நான் நினைவூட்டுகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுப்படி கேள்வி நேரத்தில் சில செய்திகள் வரும்; அதற்குப் பதில் அளிக்க நானும் அதை கேட்க வேண்டும் என்ற காரணத்திற்காக அமர்ந்து இருந்தேன். நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் என்று சொல்லுகிறபோது எங்கள் கட்சியினுடைய உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் ஒன்றை கொடுத்திருக்கிறார்கள். அதோடு அவர்கள் இதனையும் சேர்ந்து பேசுகின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி என்னுடைய அறையில் பேசி முடிவு செய்த பிறகு தான் அதை எப்போது எடுத்துக் கொள்ள முடியும் என்று சொல்ல முடியும். இன்றைக்கு எதுவும் இல்லை.

திரு. குமரி அனந்தன் : நாளைக்கு என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே !

(4) வரவு-செலவுத் திட்டம் : 1989–90—பொது விவாதம் —தொடர்ச்சி

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கான வாய்ப்பினை அளித்தமைக்கு உங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு சமுதாயத்தில் இருக்கக்கூடிய பல் வேறு மேடு, பள்ளங்களை அகற்றி. . . . .

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. லத்தீப் அவர்கள் நேற்றைய முன்தினமே அழைக்கப்பட்டு அவருடைய பேச்சினைப் பொது விவாதத்திலே முடித்துவிட்டார்கள். மீண்டும் அழைத்து அவர் பேசுவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல் லத்தீப் அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாகவும், அவருக்கு இருக்கிற நீரிழிவு நோய் காரணமாகவும் தன்னால் 1 மணிக்கு மேல் பேச முடியவில்லை என்று உணர்ந்தார். தாங்கள் மனிதாபிமான உணர்வுமிக்கவர்கள், எனவே, அந்த அடிப்படையில்தான் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) தாங்கள் மிக நெருங்கிய நண்பர் என்பதாலே மிக நெருக்கமாகவும், இறுக்கமாகவும் கேட்கிறார்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த இந்த நிதிநிலை அறிக்கை தமிழக மக்களுடையகவனத்தை மட்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி ஏற்கெனவே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து, விளக்கமாகப் பதில் சொல்லப் பட்டிருக்கிறது. மீண்டும் அதைக் கிளப்புவது நியாயமல்ல. (குறுக்கீடு.) அடுத்து மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு.) நீங்கள் முடிக்கலாமென்று நினைத்து இருந்தால், முடித்திருக்கலாம். இன்னும் நினைக்கவில்லை. அப்படி நினைக்க இன்னும் நேரமிருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆகவே இந்த அரசு மக்க ளுக்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்யாமல், மக்களை ஏமாற்றுகிற திட்டங்களைக் கொடுத்திருக்கிறது. மக்களை நீண்ட காலம் ஏமாற்ற முடியாது. மாண்புமிகு முதலமைச்சர வர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தைப் பற்றிச் சொல்கிற போது, திரு. உபேந்திரா சொன்னார் என்று ஒன்றைச் சொன்னார். 2 பிளஸ் 2, அரசியல் ரீதியாக—கணக்கு ரீதியாக நான்கும் ஆகலாம்— ஜீரோவும் ஆகலாம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த எதிர்பார்ப்பு தவறாகிப் போய், இன்றைக்கு 2-ம் 2-ம் நான்கா வதற்குப் பதிலாக ஐந்தாகி, இரண்டு இடைத் தேர்தல்களிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் வெற்றியைப் பெற்ற காரணத்தாலே, அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் எதிர்க் கட்சியை அழிக்கும் விதத் திலே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பல சம்பவங்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குப் பொறுப்பேற்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ராஜினாமா செய்ய வேண்டு மென்ற கோரிக்கையை மீண்டும் மீண்டும் இந்த மன்றத்திலே வலியுறுத்தி அமைகிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) கடலூர் பொதுக் கூட்டத்திற்குச் சென்ற சிலர் தாக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர் களே, காலையிலே எங்களுடைய கடலூர் கூட்டத்திற்கு வருகை தந்த கம்மான் என்ற தோழர் அடிக்கப்பட்டு, தாடை உடைக்கப் பட்டு. . . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். காலை யிலேயே விடை சொல்லியாகிவிட்டது. திருப்பித் திருப்பிக் கேட்டால் எப்படி ? (குறுக்கீடு). காலையிலேயே பேசியாகி விட்டது. அவையிலே நீங்கள் இல்லை. எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவையில் இல்லாதபோது, அதைப் பற்றிப் பேசி, விடை கொடுத்தாகிவிட்டது.

திரு. குமரி அனந்தன் : நான் தேவையில்லாமல் ஒரு வார்த் தைகூடப் பேசுவதில்லை. நான் காலையிலே எழுந்த உடனேயே, அந்தத் தோழர் தாடை உடைந்து. . (குறுக்கீடுகள்).

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் காலையிலேயே அந்தப் பிரச்சினையை அவர் வந்தவுடன் சொல்லாமல், சற்று பின்னாலே சொன்னபோது, முதலமைச்சரவர்கள் சொன்ன பதிலில், இதுபற்றிய விவரங்கள் என்னிடத்தில் இப்போது இல்லை, விவரத்தைக் கேட்டாலும், மாலையிலேதான் கிடைக்கும், நாளைக் காலையிலே அந்த விவரங்களைத் தருகிறேன் என்று சொன்னார்கள். இப்போது காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அப்படி நடைபெற்ற அடிதடி சம்பந்தமாக, அதிகமாக பாதிக்கப்பட்ட ஒருவர், அவர் சொன்ன பெயருள்ள ஒருவர், இறந்துவிட்டார் என்பது பற்றி எழுப்ப வேண்டுமென்பதுதான் உள்ளபடியே ஒருவர் இறந்துபோன பிறகு, உடனடியாக இப்போது எதுவும் செய்ய முடியாது. விவரம் கேட்டு, நாளைக் காலையில்தான் தெரிவிக்க முடியும். ஒரு அடிதடியிலே, விபத்திலே, கடுமையான தாக்குதலிலே யாரோ ஒருவர் இறந்துவிட்டால், அதை இந்த அவையிலே சொல்லலாம் என்றாலும்கூட, அதற்கு ஆளுங் கட்சியின் சார்பில் முதலமைச்சர் தகுந்த விளக்கம் சொல்ல முடியாத நேரத்தில் அந்தப் பிரச்சினையைச் சொல்வதால் அதிகப் பயனில்லை. அரசு அவரது கவலையைக் கருத்தளவில் புரிந்து கொண்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்தப் பிரச்சினை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கையாகும். ** **

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : நீங்கள் வெளியிலே போவதானால் போங்கள். முறை தவறிப் பேசக்கூடாது. எப்படி ஒரே கருத்தைத் திருப்பித் திருப்பிப் பேசுகிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் குறிப்பு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு.) நீங்கள் வெளியேற வேண்டுமானால், சொல்லிவிட்டு வெளியேறலாம். ஆனால், அதற்காகத் திரும்பத் திரும்ப இதையே சொல்லிக் கொண்டிருக்க அனுமதிக்க மாட்டேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.